மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. ஜவ்வாது மலையில் ஆண்டு ஒன்றுக்கு 1,000 டன் மூங்கில் தான் கிடைக்கின்றது, அது காகித ஆலை நிறுவுவதற்குப் போதாது, மேலும். ஜவ்வாது மலையில் கிடைக்கும் மூங்கில் மிகவும் குறைந்து விட்டதால், அந்த மலையில் மூங்கில் வெட்டுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது, ஆகவே, இதை வைத்து தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு சாத்தியம் இல்லை,

Declaring Maraimmalai Nagar as industrially backward area.

* Q. No. 785 –Thiru K. ABDUL LATHEEF ; Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Maraimalai Nagar near Madras has been declared as industrially backward area; and

(b) if so, the details there of?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) & (ஆ) மத்திய அரசால் மறைமலை நகர் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படவில்லை, ஆனால் மாநில அரசு தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கு அளிக்கப்படும் கீழ்க்கண்ட சலுகைகளை மறைமலை நகரில் தொடங்கப் பெறும் தொழில்களுக்கு அளிக்கின்றது :—

(1) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்,

(2) தண்ணீர் உரிமைக் கட்டணத்தில் சலுகை,

(3) மின்சக்தி கட்டணச் சலுகை,

(4) சிப்காட்டால் வழங்கப்படும் சலுகை கடன்கள்,

Issue of pattas in Ayyanambakkam Village

*Q. No. 786—Thiru SALAEM M. ARUMUGAM ; Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(a) whether the Housing Colony for Harijans initiated by the Rotary Club of Madras at Ayyanambakkam Village near Thiruverkadu in Chengalpattu district has been withheld for non-issue of pattas: and

(b) if so, the details thereof?

1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : (அ) இல்லை,

(ஆ) இவ் வினா' எழாது.

திரு. சி. கோவிந்தராசன் : அயனம்பாக்கம் என்ற இடத்தில் அரிமா சங்கத்தின் மூலம் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1978 ஜனவரி மாதம் 7 ஆம் தேதி மாவட்ட கலெக்டர் தலைமை வகித்து ஆளுநர் அவர்களால் பவுண்டேஷன் ஸ்டோன் போடப்பட்டிருக்கிறது, 4½ ஏக்கர் நிலம்; அரிசனங்கள் அதற்கு அப்ளை பண்ணியிருக்கிறார்கள், அவர்களுக்கு நிலத்தை அசைன் பண்ணாத காரணத்தால் ஸ்டேட் பாங்கு லோன் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அது குறித்த வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது, அந்த நிலத்தை அவர்களுக்கு அசைன் பண்ண அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : யாருக்கு நிலத்தைக் கொடுக்கவேண்டுமெனபதைப் பற்றி சிபாரிசு செய்கிற போது ஒரு குடும்பம் என்று சொல்லுகிறபோது ஐந்து உறுப்பினர்கள் உள்ளது. அவர்களுடைய மொத்த வருமானம் வருஷத்திற்கு 2,400 ரூபாய்க்குமேல் போகக் கூடாது, ஐந்து பேருக்கு மேல் உள்ள குடும்பத்தில் வருஷ வருமானம் 3,000 ரூபாய்க்குமேல் போகக்கூடாது. ஆகையால் இலவசமாகக் கொடுப்பதா கொடுக்கக் கூடாதா என்பதை முடிவு செய்ய வருமான விவரங்கள் கிடைக்கவில்லை.விவரம் கிடைத்தவுடன் அவர்களுக்குக் கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

வணிகவரி பற்றிய கைவார் குழுவின் அறிக்கை,

* வினா எண். 787— திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வணிகவரி சம்பந்தமாய் வரி விதிப்பில் மாறுதல் செய்யவோ வரி விதிப்பில் கூடுதல் செய்யவோ திரு. கைவார் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டத்தில் ரிப்போர்ட் அரசுக்கு வந்துவிட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் சட்டப்பேரவை முன் வைக்கப்படுமா?